றில் சொந்தக் கட்டடம் 2,636. 'ரென்ட் ஃப்ரீ பில்டிங், 30 தான் இருக்கின்றன. ஆனால் தஞ்சை மாவட்டத்திற்கு இந்த ஆண்டு 131 கட்டடங்கள் கட்டித்தர புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்கிற தகவலையும் தெரிவித்துக் கொள்கிறேன். 1989–90 ஆம் ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது 25 திருட்டுக் குற்றங்கள் தஞ்சை மாவட்டத்தில் இருந்தன. ஆனால் நமது மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு பொறுப்பேற்றுக் கொண்ட உடனே 6 குற்றங்கள்தான் அங்கே கண்டுபிடிக்கப் பட்டு இருக்கின்றன என்பதையும் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண். 18, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்.

18—

மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பாதை அமைத்தல்.

*11077—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைவாழ் மக்கள் மேம்பாடு திட்டத்தின்கீழ் பாதை அமைக்க அரசு அனுமதி அளித்த பிறகும் ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்</u>: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம் பாட்டுத் திட்டத்திற்கான ஆண்டுத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பின்பு, அதற்காக விரிவாக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு தொழில் நுட்ப அங்கீகாரம் வழங்கப்படுகிறது. அதன் பின்பு ஒப்பந்தங்கள் கோரப்பட்டு வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன. இதற்கு சுமார் ஆறு மாத காலம் ஆகிறது. வேலை ஒப்படைக்கப்பட்ட பின்பு வனப் பகுதிகள் இல்லாத இடங்களில் வேலைகள் விரைவாக மேற் கொள்ளப்பட்டு முடிக்கப்படுகின்றன. பாதுகாக்கப்பட்ட வனப்

1993 பிப்ரவரி 8]

பகுதிகளில் அரசு அனுமதி பெற்ற பின்புதான் வேலையைத் துவக்க முடியுமாதலால் அரசுக்குப் பிரேரணை அனுப்பி அரசின் அனுமதி பெற்ற பின்பு வேலைகள் துவங்கப்படுகின்றன. இதற்குத் தேவைப்படும் கால அவகாசம தவிர்க்க முடியாததாகிறது.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த மலை வாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சாலைகள் அமைக்க அரசு அனுமதி அளித்து 4 அல்லது 5 ஆண்டுகள் ஆனபிறகும் கூட வேலைகள் துவக்கப் படாமல் உள்ளதைக் கருத்தில் கொண்டு அனுமதி அளித்தவுடன் சாலைகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் அனுமதி கிடைத்தவுடன் வேலைகள் மிக வேகமாகத் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 19, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

19—

தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை தொடங்குதல்.

*13827— திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் இறால் வளர்ப்பு தொழிற்பேட்டை அரசால் தொடங்கப்படுகிறதா?

(ஆ) அவ்வாறாயின் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு.டி.ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.